முருகப்பெருமான் துணை

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

31.10.2024

1. சோதி மயமாகி பிரணவக் குடிலில்
சுபிட்சம் வேண்டி வருபவர்க்கு
சோதிநிலையில் அரங்கன் யானும்
சூட்சும வடிவில் வரமருளி வர

2. வருகவே குரோதி துலை திங்கள்
வல்லமைபட ஈராம் குருவார அருளாசி
தருகிறேன் என் மக்களெல்லாம்
தன்னம்பிக்கை தனித்துவமும் தானடைய

3. அடையவே தீப ஒளித் திருநாளில்
அரங்கன் என் ஒளி அணுகி
தடையற சேவிக்கும் மக்களுக்கு
தவம் செய்த பலமதை தருவேன்

4. தருவேன் அவரவர் கேட்கும்
தனிப்பட்ட வேண்டல்கட்கும்
வருமுலகில் கைகூட வேண்டி
வரமாகக் கனிந்து அருள்வேன்

5. அருளவே இன்று குடிலை அணுகி
அகசுத்தி வேண்டுபவர்க்கு
தருவேன் மனமாயை போக்கி
தானென்ற அகந்தை அணுகா

6. அணுகா அரங்கன் என் அடிமையே
ஆறுமுகப் பெருமான் சேவைக்கு
ஞானவழி வந்த கடைத்தொண்டனே எனும்
ஞானமோடு வாழ அருளுவேன்

7. அருளுவேன் அருள் பொருள் வளம்
அறிவிப்பேன் தன தேட்டு வளம்
வரமாகி தேக மன பலமுடன்
வாசிவசமாகி அழியாமை தனை அடையவும்

8. அடையவும் வேண்டி ஒளி நாளில்
அரங்கனே தீட்சை வரம்
சீடன் ராம் ஒற்ற குமார் கரம்பட
சூட்சும வடிவில் தந்தருளுகிறேன்

9. அருளவே தொண்டர் மக்களும்
அணுகிடும் உலக மக்களும்
வரம் கேட்டு தீட்சை ஏற்க
வந்தநல் பிறவி நோக்கம் நிறைவேற

10. நிறைவே மன அமைதி பெற
நிலவுலகில் எல்லாம் கைகூடும்
குறைகள் இடர்பாடுகள் எல்லாம்
குருவரங்கன் என்னால் விரட்டப்பட்டு

11. பட்டுமே பாதுகாப்பு நிறைந்த
பண்பான ஞான வாழ்வாக
இட்டம்போல் அன்னதான சேவை ஆற்றி
இனி பிறவா பெரும்பேறு காண்பர் என்பேன்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–